**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.52/2025

வாதி தரப்பு சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 16.04.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வா.சா.1– திருவேங்கடம் த/பெ வடமலை</u>**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவா சொத்து 1972 ம் ஆண்டு எனது அம்மா பொன்னாச்சி அம்மாள் என்பவரிடமிருந்து 80 செண்ட் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். நான் வழக்கு போட்டுள்ள தாவா சொத்து சர்வே எண். 219/2 பி என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பட்டா படி 16 செண்ட் என்றால் சரிதான். சர்வே எண். 219/2 ஏ–ல் 56 செண்ட் உள்ளது என்றால் சரிதான். 1972 ல் வாங்கிய 80 செண்ட் இடத்தின் பட்டாவில் உடைத்து இரண்டாக ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அம்மா பெயரில் வாங்கிய சொத்து பட்டா அப்பா பெயரில் இருந்தது. பூர்வீக இடத்தில வீடு கட்ட எனது அம்மா அப்பா சம்மதம் கொடுத்தார்கள்.

2. சம்மதம் கொடுத்தார்கள் என்றால் வாய்வழியாகத்தான் சொன்னார்கள். வீட்டு வரி ரசீது வீடு கட்டியதிலிருந்து என் பெயரில் தான் இருக்கிறது என்றால் சரிதான். மின்சார ரசீது எனது தம்பி பெயரில் தான் இருக்கிறது. தாவா சொத்தில் வீடு கட்டி 45 வருடம் ஆகீறது. வீடு நானும் எனது தம்பியும் சேர்ந்துதான் கட்டினோம். எனக்கு வயது 66 ஆகிறது. வீடு கட்டும் போது எனக்கு வயது 26 இருக்கும். வீடு கட்டும் போது கூலி வேலைக்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது எனது தம்பிக்கு 16 வயதிருக்கும்.

3. வீடு கட்டும் போது எந்த வேலைக்கு செல்லாமல் வீட்டில் தான் இருந்தேன் என்றும் பிரதிவாதி ராணுவத்தில வேலை பார்த்து அவருடைய வருமானத்தில் தான் வீடு கட்டப்பட்டது என்றும், பிரதிவாதி வெளியூரில் இருந்ததாலும் நானும் எனது தம்பியும் மோசடியாக ஆவணங்கள் 4, 5, 6 ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. கடன் வாங்கிதான் வீடு கட்டினோம் என்பதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல்செய்துள்ளோமா என்றால் 30 வருடங்களுக்கு முன்னால் வாங்கியது எதுவுமில்லை.

4. குளித்தலை கோட்டாச்சியர் பா.மு. அ.1.366/2025 என்ற வழக்கில் 07.07.2025 ம் தேதி அந்த மனு மீது உத்தரவு போட்டுள்ளார் என்றால் எனது

அண்ணன் போட்டு தள்ளுபடி செய்யப்பட்டது அதில் நானும் கலந்து கொண்டேன். அந்த உத்தரவில் மேல்முறையீடு எண். கரூர் மாவட்ட வருவாய் அலுவலர், ந.க.சி.1/15435/2025 என்று மேல்முறையீட்டு மனுவானது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

5. எனது அம்மா வாங்கிய இடத்தில் தவறுதலாக நத்தம் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதிகாரிகள் வந்து விசாரணையின் போது பிரதிவாதி ஊரில் இல்லாததால் தவறுதலாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் 40 வருடமாக பிரதிவாதி ஊரில் இல்லை. தாவா சொத்தானது பூர்வீகமாக அம்மாவிற்கு பாத்தியப்பட்டதற்கான ஆவணம் உள்ளது தாக்கல் செய்துள்ள வீட்டு வரிரசிது, மின்சார கட்டண ரசீது, இதற்கு முன்பு தகப்பனார் பெயரில் இருந்தது நான் மோசடியாக மாற்றி ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல.

6. நான் எங்கே குடியிருந்து வருகிறேன் என்றால் வேங்காம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்தை பொறுத்த வரையில் இந்து கூட்டுக்குடும்ப சொத்து, அம்மா பெயரில் உள்ளதால் 5 பேருக்கும் சொந்தமானது எனவே இந்த தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் UDR பட்டா எனது அப்பா பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.28 10:55:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.